සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

| வினா இல | புள்ளிகள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 (i) | |
| 4 (ii) | |
| 4 (iii) | |
| மொத்தம் | |

| | |
|---|---|
| விடைத்தாள் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பதிந்தவர் | |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2013 (2015)**

Limited Competitive Examination for Recruitment to Grade III of Sri Lanka Administrative Service - 2013 (2015)

**(04) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II**

Case Study relating to Public Administration II

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

- **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

**சுட்டெண் :**........................

**1.** பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிவு செய்து பகுப்பாய்வாகவும் தர்க்க ரீதியாகவும் விடயங்களை முன்வைத்து 250 - 300 சொற்களைக் கொண்ட கட்டுரையொன்று எழுதுக.

(i) இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளுக்காகவும் சமூக நலனுக்காகவும் செல்லிடத் தொலைபேசி தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.

(ii) பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காகவும் நகர்ப்புற வாகன நெரிசல்களைக் குறைப்பதற்காகவும் இலங்கை புகையிரத சேவையை விரிவுபடுத்தல்.

(iii) பணத்தாசை, அதிகார மோகம், பாலியல் வேட்கை ஆகியன காரணமாக உலகெங்கும் பரவிப் பெருகும் குற்றங்களும் ஊழல் மோசடிகளும்.

(iv) இலங்கையின் நவீன இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் சிறுவர் மற்றும் இளைஞர் பரம்பரையினரின் அழகியற்கலை ஆற்றலை விருத்தி செய்வதற்கான சமூகசேவை.

(v) மனிதரின் பௌதிக தேவைகளை மட்டுமன்றி ஆன்மிகத் தேவைகளையும் கவனத்திற்கொண்டு நாட்டின் அபிவிருத்தி செயன்முறையைத் திட்டமிடுவதன் முக்கியத்துவம்.

(vi) உலகில் இனங்கள் மதங்களுக்கிடையிலான மோதல்களினால் சீரழியும் அமைதியான மானிட சகவாழ்வை மீண்டும் தாபிப்பதற்கான உத்திகள்.

[பக் 2 ஐப் பார்க்க.

[ பக் 3 ஐப் பார்க்க.

*(30 புள்ளிகள்)*

**2.** பின்வரும் பந்தியை வாசித்து அதன் சொற்களின் எண்ணிக்கை **மூன்றில் ஒன்றாகும்வரை** சுருக்கி எழுதி பொருத்தமான **தலைப்பினையும்** இடுக. சுருக்கத்தின் முடிவில் நீங்கள் எழுதிய **சொற்களின் எண்ணிக்கையைக்** குறிப்பிடுக.

உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் மீட்சியடைந்து வரும் போக்குகளின் பின்னணியில் சேவைகள் மற்றும் வேளாண்மைத் துறைகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் மேம்பாட்டுக்கு இலங்கை கணிசமான எதிர்கால வாய்ப்பு வளத்தை கொண்டுள்ளது. உலக முதலீட்டு வாய்ப்புக்களின் அளவீடு 2010 / 2012 வெளிப்படுத்துகைகளின்படி இனிவரும் ஆண்டுகளில் முதன்மை மற்றும் சேவைகள் துறைகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு வளர்ச்சி வாய்ப்புக்கள் உயர்வாக இருக்கும். மோதலுக்குப் பின்பான காலப்பகுதியில் சுற்றுலாவை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கை ஏற்கனவே ஈடுபட்டுள்ளமையால் சுற்றுலா தொடர்பான வெளிநாட்டு நேரடி முதலீட்டை மேலும் பலப்படுத்த வேண்டும். இதேவேளை நடுத்தர காலப்பகுதியிலிருந்து நீண்ட காலப்பகுதியில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு கல்வி மற்றும் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் போன்ற துறைகளுக்குக் கூடிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்க்கவேண்டும்.

இலங்கையின் உள்ளார்ந்த வளம் மிக்க முதலீட்டுத் துறையான வேளாண்மைத் துறை இதுவரை பெருமளவில் ஆராயப்படவில்லை. வேளாண்மைத்துறையில் முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்கு பன்னாட்டு நிறுவனங்களிடையே வளர்ச்சியடைந்து வரும் ஆர்வம் காணப்படுகிறது. ஏனெனில் இந்நிறுவனங்கள் இத்துறையில் எழக்கூடிய அச்சுறுத்தல்களை ஓரளவு எதிர்பார்ப்பதாலாகும். ஐக்கிய நாடுகளின் எதிர்வு கூறுகளின்படி உலகக் குடித்தொகை வளர்ச்சியையும் (2012 அளவில் 7 பில்லியனையும் 2050 அளவில் 9 பில்லியனையும்) அடைகிறது. உலகக் குடித்தொகை வளர்ச்சியின் அத்தகைய எறிவுகள் குறிப்பாக காணி மற்றும் நீரின் பற்றாக்குறை அதிகரித்துச் செல்லல் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் எந்தவொரு பாகமான தாக்கத்தின் பின்னணியில் கடுமையான கொள்கைச் சவால்களைச் சுட்டிக் காட்டுகின்றன. இதேவேளை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் காபன் குறைந்த கைத்தொழில்கள் போன்ற துறைகளில் கூடிய கவனம் செலுத்துவதற்காக வெளிநாட்டு நேரடி முதலீட்டை நெறிப்படுத்துவதன் மூலம் தயாரிப்புத் துறையின் உள்ளார்ந்த வளத்தையும் அதிகரிக்கலாம். இத்துறைகளுள் மாறிச் செல்லும் கம்பனிகளிடையே வளர்ச்சியடைந்து வரும் ஆர்வம் இருப்பதால் மட்டுமன்றி இது நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை அடைவதற்கு முக்கியமான உற்பத்தி திறன் இயலளவின் விரிவாக்கத்தை வசதிப்படுத்துவதுடன் ஏற்றுமதிப் போட்டித் தன்மையையும் தரமுயர்த்தும் என்பதினாலாகும்.

[ பக் 4 ஐப் பார்க்க.

*(25 புள்ளிகள்)*

**3.** பின்வரும் பந்தியை வாசித்து ஒவ்வொரு பந்தியினதும் பிரதான கருத்தை முடியுமான அளவு சுருக்கமாக **ஒரு வாக்கியத்தில்** எழுதுக. **தடித்த எழுத்தில்** எழுதப்பட்டுள்ள சொற்றொடர்களை **விளக்குக**.

(i) கம்பனித்துறை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்கின்றதென்பது பரவலாக ஏற்கப்பட்டுள்ளது. எனவே விரைந்த அபிவிருத்தியை வேண்டி நிற்கும் அரசாங்கங்கள் நாட்டில் கம்பனித்துறையை ஆளுகைப்படுத்தும் பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு பொருத்தமான சட்டத் தொகுதி தேவைப்படுவதுடன் அதிலுள்ள சொத்துரிமைகளை நிலைநாட்டி தெளிவுபடுத்துகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதில் செலவைக் குறைக்கின்ற பொருளாதார ரீதியில் தங்கியிருப்பதன் **எதிர்வுகூறலை** அதிகரிக்கின்ற மற்றும் துஷ்பிரயோகங்களுக்கெதிரான ஏற்பாடுகளுடன் ஒப்பந்த ரீதியிலான பங்காளர்களை வழங்குகின்ற சட்டங்கள் உள்ளிட்ட சிறந்த சட்டங்கள் தேவைப்படுகின்றன. பொருத்தமான விதிகள் இருப்பது வியாபாரத்தின் ஆற்றலை அதிகரிப்பது மட்டுமன்றி பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடிகளின்போது அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் அதிகரிக்கிறது.

(ii) உலகளாவிய பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மோதல்களுக்கு பின்னர் சுற்றுலாவில் ஏற்பட்ட முன்னேற்றங்களுடன் இணைந்த வான் பயணிகள் மற்றும் நாட்டிற்கான சரக்குப் போக்குவரத்து என்பனவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை தோற்றுவித்தது. 'சிறிலங்கன் எயர்லைன்சினால்' மேற்கொள்ளப்பட்ட பயணிகளின் போக்குவரத்து 2010 இல் 24.5 சதவீதத்தினால் அதிகரித்தது. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் 2010 இல் முன்னொருபோதுமில்லாத அளவு 26 445 மெற்றிக் தொன் கொண்ட **மாற்றியேற்றும்** சரக்கினைக் கையாண்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. கையாளப்பட்ட மொத்த வான் சரக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20.3 சதவீதத்தினால் அதிகரித்தது. புதிய ஏற்றுமதி கடைக்கோடி ஒன்று புதிதாகச் சேர்க்கப்பட்டதனால் வான் சரக்கு கையாளல் இயலளவு இவ்வாண்டில் இரண்டு மடங்காகியது. தற்போதைய இயலளவு ஆண்டிற்கு 300 000 மெற்றிக் தொன்களாக காணப்படுகிறது.

[ பக் 5 ஐப் பார்க்க.

(iii) ஆங்கிலம், மேலைநாட்டுக் கலாசாரம் என்பவற்றைக் கற்பதற்குத் தேவையான சாதனங்களை அமைப்பதுடன் எங்களுடைய இளைஞர் தங்கள் தாய்மொழி, பாரம்பரிய வரலாறு, மரபு ஆகியவற்றையும் அறியச் செய்வதே இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கமாயிருக்கும். அப்பொழுதுதான் இன்றைய தாய்மொழி இலக்கியமானது பகட்டறிவு, சிறுதிறம் என்பவற்றிலிருந்து விடுபட்டு **மேலைத் தேய கீழைத்தேயக் கலாசாரத்தில் சிறந்தவற்றைப் பரவச் செய்வதற்குத்** தகுதி வாய்ந்த கருவியாக அமையும். அப்பொழுதே மக்கள் தமது சொற்றொகுதியிலே சில ஆங்கிலச் சொற்களையும் சமூகத்திலே சில ஐரோப்பிய பழக்கவழக்கங்களையும் சேர்த்துக் கொள்வதுதான் மேலை நாட்டு நாகரிகத்தினால் தாமடைந்த பயன் என்றிராது உண்மையான மேம்பட்ட பயனைப் பெறக்கூடியவராவர்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

*(15 புள்ளிகள்)*

**4.** பின்வரும் பந்திகளை வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **சுருக்கமாக** விடைகளை எழுதுக.

(i) 2013 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் வீதி அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கியது. இதன்படி மாகாண வீதிகளின் இணைப்பை மேம்படுத்தும் நோக்குடன் பிரதேச வீதிகள் முன்னேற்ற செயற்றிட்டம் (மத்திய மற்றும் சப்பிரகமுவா மாகாணங்கள்)மாகாணவீதிகள் முன்னேற்ற செயற்றிட்டம் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண வீதிச் செயற்றிட்டம் மற்றும் வட மாகாண இணைப்புச் செயற்றிட்டம் என்பனவற்றை நடைமுறைப்படுத்தியது. யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றால் நிதியிடப்படும் இச்செயற்றிட்டங்கள் 2014 - 2015 ஆண்டில் நிறைவடையும். மேலும் 2013 ஆம் ஆண்டில் அமைச்சு கொழும்பு பாரிய கழிவு நீர் முகாமைத்துவச் செயற்றிட்டம், அனர்த்த பதிலிறுப்பு வலையமைப்பினை (கட்டம் II) தரமுயர்த்துதல், இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்றிட்டம், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர்வழங்கல் சுகாதாரச் செயற்றிட்டம் என்பவற்றையும் தொடர்ந்து மேற்கொண்டது.

சமச்சீரான பிரதேச வளர்ச்சியை எய்தும் நோக்குடன் மாகாண சபைகள் தமது வரவு செலவுத்திட்டத்தின் பரந்தளவிலான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அவற்றுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றங்களை விதந்துரைக்கின்ற மிக இன்றியமையாததான வகிபாகத்தினை நிதி ஆணைக்குழு தொடர்ந்தும் மேற்கொண்டது. முன்னர் மாகாணங்களினால் பின்பற்றப்பட்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு அணுகுமுறையினை மேம்படுத்துவதற்காக இவ்வாண்டுப் பகுதியில் முகவர் பெறுபேற்றுக் கட்டமைப்பு அணுகுமுறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

(அ) 2013 ஆம் ஆண்டில் முகவர் பெறுபேற்றுக் கட்டமைப்பு அணுகுமுறையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நன்மை யாது?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(ஆ) 2013 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மூலம் வீதி அபிவிருத்திக்காக முன்னுரிமை வழங்கப்பட்ட எத்தனை செயற்றிட்டங்கள் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

[ பக் 6 ஐப் பார்க்க.

(இ) நிதி ஆணைக்குழுவால் நிறைவேற்றப்பட்ட மிக முக்கிய பணி யாது?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

(ஈ) 2014-2015 காலப்பகுதியில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்ற செயற்றிட்டங்களுக்கான நிதி எவற்றினால் வழங்கப்படுகின்றது?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

(உ) 2013 ஆம் ஆண்டில் அமைச்சினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் எத்தனை?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

*(10 புள்ளிகள்)*

(ii) இரண்டாந்தர மற்றும் மூன்றாந்தர நலக் கவனிப்பு பணி வழங்குனர்கள் மீதான சுமையினைக் குறைக்கும் பொருட்டு தற்பொழுதுள்ள ஆரம்பமட்ட நலக்கவனிப்பு முறைமையினை வலுப்படுத்துவதற்கு பலமான தேவை காணப்படுகின்றது. ஆரம்ப நலக் கவனிப்பு வழங்குனர்களிடம் செல்லாமல் உயர்மட்ட வைத்தியசாலைகளிலிருந்து அல்லது தனிப்பட்ட சிறப்பு வைத்தியர்களிடமிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வது அரசாங்கத்திற்கு நலக் கவனிப்பு தொடர்பான செலவுகளை அதிகரிப்பது மட்டுமன்றி தனிப்பட்டவர்களுக்கும் குறிப்பிடத்தக்க செலவுகளை ஏற்படுத்துகிறது. இப்பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு சுகாதார அமைச்சு பரந்தளவு வசதிகளை அணுகும் திட்டம் ஒன்றினை முன்மொழிய எண்ணியுள்ளது. இதில் முக்கியமான உபாயம் ஆரம்ப மட்ட நலக் கவனிப்பினை வலுப்படுத்துவதாக இருக்கும். அதாவது அனைவருக்கும் நியாயமான உட்புகுதலை ஏற்படுத்துதல் ஆகும். இத்திட்டப்படி ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு வரும் நோயாளிகள் விசேட வைத்தியரைச் சந்திப்பதற்கும் விசேட வைத்தியசாலைகளுக்கு செல்வதற்கும் அடிப்படை சிகிச்சைகளின்பின் நோயாளிகள் மீண்டும் அந்த நிறுவனங்களுடன் இணைவதற்கும் வசதி செய்யப்படும்.இதனூடாக இந்த நிறுவனங்கள் விசேட வைத்தியசாலைகளுடன் இணைக்கும் முறையைத் திட்டமிடுவதற்கு கொள்கை வழிமுறை நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதனூடாக நலன்சேவை தொடர்ச்சியாகப் பாதுகாக்கப்படும். தொடர்ச்சியான நலன்சேவை இடம்பெறுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் நிபுணர்கள் வைத்தியசாலைகள் (ஆதார வைத்தியசாலைகளும் அதற்கு மேலும்) பரிந்துரைப்பு மற்றும் பின் பரிந்துரைப்பிற்காக அவற்றின் பகுதியில் உள்ள ஆரம்ப நிலை நிறுவனங்களுடன் இணைக்கப்படும்.

(அ) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு "தொடர்ச்சியாக நலன்சேவையை உறுதிப்படுத்திக் கொள்ளல்" என்ற பெறுபேற்றை அடைவது தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணி எது?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

(ஆ) நோயாளர்கள் உயர்மட்ட வைத்தியசாலைகளிலோ அல்லது தனிப்பட்ட சிறப்பு வைத்தியர்களிடமிருந்தோ பணிகளைப் பெறச் செல்வதனால் எழுந்துள்ள பிரச்சினைகள் யாவை?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

(இ) பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுகாதார அமைச்சு முன்வைத்துள்ள திட்டத்தின் அடிப்படை அம்சங்கள் யாவை?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

(ஈ) ஆரம்ப மட்ட நலக் கவனிப்பு தொகுதியை வலுவூட்டுவது முக்கியமானதாக ஏன் கருதப்படுகின்றது?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

(உ) பிரச்சினைகளுக்குத் தீர்வாக சுகாதார அமைச்சு முன்மொழிந்துள்ள உத்தி யாது?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

*(10 புள்ளிகள்)*

(iii) குளத்து நீரை வெளிக்கொண்டு செல்வதற்கெனப் பயன்படுத்தப்பட்டதும் சிங்களத்தில் பிஸோகொட்டுவ என வழங்கப்படுவதுமாகிய மதகு திரவங்களின் அமுக்கம் பற்றிய ஆராய்ச்சியின் விளைவே என்பதற்கு ஐயமில்லை. ஏனெனில் குளத்திற் காணப்பட்ட முப்பதாயிரம் முதல் எழுபத்தையாயிரம் வரையுள்ள ஏக்கர் அடியளவு (acre-feet) நீரின் அமுக்கம் அனைத்தும் கட்டுக்கரைக்கு அல்லது கால்வாய்க்கு அல்லது வயல்களுக்குச் சேதத்தை விளைவிக்கக்கூடிய பாய்ச்சல் வேகத்தை உண்டாக்காமல் தடுக்கும் வண்ணம், அம்மதகு சிறப்புற அமைக்கப்பட்டுள்ளதாதலின் என்க. இவ்வமைப்பு சிங்களவரின் கண்டுபிடிப்பே என்பதற்கு ஐயமில்லை. அதன் இன்றைய வடிவமான ஒரு வாயில் மடையை ஒரு நூற்றாண்டுக்கு முன் மேலை நாட்டினர் அறிந்திருக்கவில்லை.

மரப்பலகைகளைச் சரிப்படுத்துவதன் மூலம் நீரை ஒழுங்குபடுத்தக் கூடிய முறையில் அமைந்த ஓமடைவாயிலும் (ஓவும்) ஓர் அரிய அமைப்பாகும். கலிங்கு என்பது குளத்தின் பிறிதொரு அமைப்பாகும். இது பண்டைச் சிங்களவரின் நீர்ப்பாய்ச்சும் கலை அறிவைப் புலப்படுத்துகிறது. கட்டுக்கரையைக் காத்தற் பொருட்டுப் பிரதானமாக அமைக்கப்பட்ட இக்கலிங்கு அடுத்துள்ள வயல்களையும் வீடுகளையும் காத்தது. கட்டுக்கரை தாங்கக்கூடிய அளவு நீரையே குளம் கொண்டிருப்பதற்கு கலிங்கு வழிசெய்தது. மிகையானநீர் கலிங்கின் மேலாக வழிந்து மக்கள் வாழாப் பிரதேசத்துக்குப் பாயுமாறு விடப்பட்டது. இங்கே இவ்வாறு ஒரோவொருகால் வெள்ளப் பெருக்கு நேர்வதால் எவ்விதக் கேடும் உண்டாவதில்லை.

நீர்பாயும் கால்வாய்கள் நீரரிப்பினாற் பள்ளமாகாதவாறும் அவற்றில் வண்டல் படியாதவாறும் இருத்தற் பொருட்டுப் பாயும் நீரின் சாய்வு விகிதத்தை ஒழுங்கு படுத்துவதிலே தனது தேர்ச்சியைக் காட்டிய பண்டைச் சிங்களப் பொறியியலாளன் வண்டற் குழிகளை அமைத்து வண்டற் படிவு பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் தனக்கிருந்த திறமையைக் காட்டினான். இரண்டைக் குளத்திலும் அனுராதபுரத்துப் பொன்மீன் பூங்காவிற் காணப்படுகின்ற நீராடற் குளத்திலும் நீருட் செல்வழிகள் வண்டற் குழிகளுடன் அமைக்கப்பட்டன. உட்பாய்ச்சல் மட்டமும் வெளிப்பாய்ச்சல் மட்டமும் கவனமாகப் அமைக்கப்பட்டிருந்தமையால் நீராடற் பொய்கையினுள் சேறு உட்புகாதவாறு இவ்வண்டற் குழிகள் பாதுகாத்தன.

(அ) வண்டற்படிவு நிரம்பி குளம் நிரம்புவதைத் தடுக்க பண்டைய சிங்களப் பொறியிலாளர் பயன்படுத்திய உத்திகள் யாவை?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

(ஆ) பண்டைய சிங்களவரின் நீர்ப்பாசன அறிவை வெளிப்படுத்தும் உதாரணங்களாக இங்கு காட்டப்பட்டுள்ள அற்புதமான ஆக்கங்கள் யாவை?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(இ) பண்டைய சிங்களவர் குளங்களில் கலிங்கு அமைப்பதனூடாக அடைய எதிர்பார்த்த நோக்கங்கள் யாவை?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(ஈ) பண்டைய சிங்களவர் எந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பிஸோகொடுவ எனப்படும் மதகை நிர்மாணித்தனர்?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(உ) வெளியேறும் நீரின் அளவை கூட்டிக் குறைப்பதற்கும் மேலதிக நீரை வெளியேற்றுவதற்கும் பயன்படுத்திய அமைப்பு எது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

*(10 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2013 (2015)**
Limited Competitive Examination for Recruitment to Grade III of
Sri Lanka Administrative Service - 2013 (2015)

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

## (03) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I
## Case study relating to Public Administration I

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

மிக முக்கியம் :

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்**



※ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம், ஐந்தாம் பக்கங்களில் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

முக்கியம் :

※ இவ்வினாத்தாள் பகுதி I பகுதி II ஆகிய பகுதிகளை கொண்டு **10** பக்கங்களிலும் **50** வினாக்களையும் கொண்டது.

※ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

※ பகுதி I **இன் எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலும் பகுதி II இன் எல்லா வினாக்களுக்கும் தரப்படுகின்ற தாள்களிலும்** விடை எழுதுக.

※ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலங்கள்** ஆகும்.

※ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

※ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

※ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

※ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

※ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை எடுத்தல் என்பன குற்றமாகும்.

※ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 5 | |
| 3 | 6 - 11 | |
| 4 | 12 - 17 | |
| 5 | 18 - 21 | |
| 6 | 22 - 31 | |
| 7 | 32 - 37 | |
| 8 | 38 - 43 | |
| 9 | 44 - 45 | |
| 10 | 46 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

## பகுதி I

- 1 தொடக்கம் 5 வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் / சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை.

திரு. சுந்தரபெருமாள் மற்றும் திரு. நீல சிறிதரன் ஆகியவர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையிலே சித்தியடைந்து தகுதிகாண் காலத்தின் கீழே நிவாரண சேவைகள் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள இரு அலுவலர்களாவார்கள்.

நிவாரண சேவைகள் திணைக்களத்தினுள் கோப்புகளை தொலைத்தமை தொடர்பாக சில அலுவலர்களுக்கு எதிராக முறைமையான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அந்த அலுவலர்களிடையே தகுதிகாண் காலத்திற்குட்பட்டுள்ள திரு. நீல சிறிதரனும் அடங்குகிறார். அவ்வாறே தகுதிகாண் காலம் முடிவடைந்த போதும் திரு. சுந்தரபெருமாளின் சேவைகள் தொடர்பாக திருப்தியடைய முடியாமையினால் சேவையின் குறையை நிவர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியதோடு அவரின் தகுதிகாண் காலம் மேலுமொரு வருடத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிகள் / சம்பவங்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக

1. திரு.சுந்தரபெருமாள் மற்றும் திரு. நீல சிறிதரன் ஆகியோரினது முதலாவது மற்றும் இரண்டாவது வருடங்களுக்கு உரிய தகுதிகாண் கால அறிக்கையானது நிவாரண சேவைகள் திணைக்களத்தினது பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டிருப்பது கீழேயுள்ள எந்த பின் இணைப்பின் படியாகும்?

   (1) மூன்றாவது பின் இணைப்பு (2) நான்காவது பின் இணைப்பு
   (3) ஐந்தாவது பின் இணைப்பு (4) ஆறாவது பின் இணைப்பு (.........)

2. திரு. நீல சிறிதரனுக்கு எதிராக உள்ள முறைமையான ஒழுக்காற்று விசாரணை தகுதிகாண் காலம் நிறைவடைவதற்கு முன்னர் நிறைவு செய்ய முடியாதிருக்கும். போது அவரது நியமன அதிகாரியினால் அவர் தொடர்பாக செய்யக்கூடியது இவற்றுள் எதுவாகும்?

   (1) குற்றப்பத்திரிகையினை திருத்துதல்.
   (2) தகுதிகாண் காலத்தை நீடித்தல்
   (3) சேவையை நிரந்தரமாக்கி முறைமையான ஒழுக்காற்று விசாரணையினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்.
   (4) கட்டாய விடுமுறையில் அனுப்பி முறைமையான ஒழுக்காற்று விசாரணையினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல். (.........)

3. திரு.சுந்தர பெருமாளினது குறையை நிவர்த்தி செய்து கொள்வதற்காக அவரினது தகுதிகான் காலத்தை நியமன அதிகாரியினால் வீடிக்கப்படக்கூடிய உச்ச கால எல்லை எத்தனை வருடங்களாகும்?

   (1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று (4) நான்கு (.........)

4. நீடிக்கப்பட்ட இந்தக் கால எல்லையினுள் திரு.சுந்தர பெருமாளினது சம்பள அதிகரிப்பு தொடர்பாக எடுக்கக்கூடிய படிமுறைகள் எவை?

   (1) தற்காலிகமாக இடைநிறுத்தல் (2) நிறுத்தி வைத்தல்
   (3) குறைத்தல் (4) பிற்போடுதல் (.........)

5. குறித்த காலத்தினுள் குறையை நிறைவு செய்து கொள்வதற்கு திரு. சுந்தரபெருமாளினால் முடியாத காரணத்தினால் அவரது நியமனத்தை முடிவுறுத்த நியமன அதிகாரி தீர்மானித்திருந்தால், அதற்கேற்ப அவரது நியமனம் முடிவுறுத்தும் கடிதத்தை தயாரிக்க வேண்டியது கீழுள்ள எந்த பின் இணைப்பின் படியாகும்.

   (1) நான்காவது பின் இணைப்பு (2) ஐந்தாவது பின் இணைப்பு
   (3) ஆறாவது பின் இணைப்பு (4) ஏழாவது பின் இணைப்பு (.........)

*( 01 × 5 = 05 புள்ளிகள்)*

- 6 தொடக்கம் 10 வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் / சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை.

கிராமிய உற்பத்தி திணைக்களத்திலே திணைக்களத்திற்குரிய பதவியொன்றான மாதிரி வடிவமைப்பு கலைஞர் பதவிக்கு நியமிக்கப்பட்ட செல்வி. கங்கா அமிலன் அவர்கள் அந்த திணைக்களத்தினது பணிப்பாளரரைச் சந்தித்து தமக்குரிய பதவிக்கான கடமைகளை பொறுப்பேற்றதுடன் சேவைக்கு இணைந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சிகள் / சம்பவங்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக

[பக் 3 ஐப் பார்க்க.

6. பதவியைப் பொறுப்பெடுத்ததற்கு மேலதிகமாக அரசியலமைப்பு சட்டத்திற்கேற்ப செல்வி. கங்கா அமிலன் அவர்கள் உறுதிமொழி அல்லது சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டியது எவ்வளவு கால எல்லையிலாகும்?
(1) 7 நாட்கள் (2) 2 கிழமைகள் (3) 1 மாதம் (4) 2 மாதம் (.........)

7. செல்வி.கங்கா அமிலன் அவர்கள் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பதை உறுதிப்படுத்தும் கடிதத்தை முன்வைக்க வேண்டியது எந்த பின் இணைப்பின்படியாகும்?
(1) முதலாவது பின் இணைப்பு (2) இரண்டாவது பின் இணைப்பு
(3) மூன்றாவது பின் இணைப்பு (4) நான்காவது பின் இணைப்பு (.........)

8. தனது வைத்திய பரிசீலனை அறிக்கையினை செல்வி. கங்கா அமிலனால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியது நியமனத்தை பெற்றுக்கொண்ட எவ்வளவு காலத்தினாலாகும்?
(1) 1 மாதம் (2) 2 மாதம் (3) 3 மாதம் (4) 4 மாதம் (.........)

9. இந்த வைத்திய பரிசோதனை அறிக்கையானது செல்வி. கங்கா அமிலனால் பெற்றுக் கொள்ள வேண்டியது கீழ்வரும் எந்த அலுவலரிடமிருந்தாகும்?
(1) அரசாங்க வைத்தியசாலையின் கடமைப் பொறுப்புள்ள வைத்திய அலுவலர் ஒருவர்
(2) அரசாங்க வைத்தியசாலையின் விசேட வைத்திய அலுவலர் ஒருவர்
(3) அரசாங்க வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அலுவலர் ஒருவர்
(4) சுகாதார சேவைத்திணைக்கள பணிப்பாளர் நாயகம் (.........)

10. செல்வி கங்கா அமிலன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளமை பற்றி நியமன அதிகாரியினால் அறியக் கொடுக்க வேண்டியது கீழேயுள்ள எந்த அலுவலருக்காகும்?
(1) ஜனாதிபதியின் செயலாளர் (2) பிரதம மந்திரியின் செயலாளர்
(3) கணக்காய்வாளர் நாயகம் (4) சட்டமா அதிபர் (.........)

*( 01 × 5 = 05 புள்ளிகள்)*

- **11** தொடக்கம் **15** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் / சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை.

9 வருடங்கள் சேவைக்காலத்தைக் கொண்ட திரு.பிரியன் இரத்தினவேல் அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆம் வகுப்பு அலுவலராக கிராமிய மக்கள் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார்.

அந்தத் திணைக்களத்திலே பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு அலுவலரான திரு.அசூர் சேதுதாஹ் அவர்கள் அவசர மாரடைப்புக்கு முகம் கொடுத்து சில மாதங்கள் விடுமுறையைக் கழிப்பதற்காக விடுப்பினைப் பெற்றிருந்தார். அதற்கேற்ப திரு.பிரியன் இரத்தினவேல் அவர்கள் திரு. அசூர் சேதுதாஹ் இன் வேலைகளைக் கவனிப்பதற்கு பதிற்கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

அபிவிருத்தி அலுவலராக நியமனத்தைப் பெற்ற திருமதி அகிலா சிற்சபேசனின் ஆரம்ப கடமை நிலையம் கிராமிய மக்கள் திணைக்களமாகும். இப்போதைக்கு 2 வருடங்கள் அளவிலான சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ள திருமதி. அகிலா சிற்சபேசன் அவர்கள் தனது சேவைப் பிரமாணத்திற்கேற்ப 3 வருட காலத்தினுள் முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். அவ்வாறே தொலைதூர பிரதேசமொன்றில் இருந்து சேவைக்கு வரும் திருமதி. அகிலா சிற்சபேசன் அவர்கள் தனது கிராமத்திற்கு செல்ல இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருந்ததுடன் "அபிவிருத்தி வேலைகள்" தொடர்பாக இந்தியாவில் நடைபெற உள்ள வெளிநாட்டு பயிற்சி வேலைத்திட்டத்திலும் கலந்து கொள்ள எதிர்பார்த்துள்ளார்.

இந்த நிகழ்ச்சிகள் / சம்பவங்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக

11. திரு.பிரியன் இரத்தினவேல் அவர்கள் பிரதி பணிப்பாளர் பதவிக்கு பதிற் கடமைக்காக நியமிக்கப்பட முடிவது பின்வரும் எவரின் மூலமாகும்?
(1) கிராமிய மக்கள திணைக்களப் பணிப்பாளரினால்
(2) திரு.பிரியன் இரத்தினவேலினது நியமன அதிகாரியினால்
(3) தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால்
(4) ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் (.........)

12. தாபன விதிக்கோவையின் ஏற்பாட்டுக்கமைய திரு. பிரியன் இரத்தினவேல் அவர்கள் பிரதி பணிபாலர் பதிலீட்டு கடமைகளுக்காக நியமிக்கப்பட முடிவது கீழேயுள்ள எந்த விதிக்கேற்பவாகும்?
   (1) அவர் தற்போது வகிக்கும் பதவியைவிட பதிலீட்டு பதவி குறைவான பதவியாக இருத்தல்.
   (2) பதிலீட்டு பதவியானது அவர் தற்போது வகிக்கும் பதவிக்கு சமமானாதாகவோ அல்லது உயர்ந்த பதவியொன்றாகவோ இருத்தல்.
   (3) அவர் பதிலீட்டுப் பதவிக்கு சமமானதாகவோ அல்லது அண்மித்த உயர்ந்த பதியொன்றினது அலுவலராக இருத்தல்.
   (4) அவர் தற்போது வகிக்கும் பதவி மற்றும் பதிலீட்டு பதவி ஆகியன ஒரே திணைக்களத்திற்குரிய பதவியாக இருத்தல். (.........)

13. திருமதி அகிலா சிற்சபேசன் அவர்கள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் மிகவும் முக்கியமாவது கீழ்வருவனவற்றுள் எதனாலாகும்?
   (1) வெளியூர் பயிற்சி வேலைத்திட்டத்தில் கலந்து கொள்வதற்காகவாகும்.
   (2) இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவாகும்.
   (3) நியமனத்தை நிரந்தரமாக்கிக் கொள்வதற்காகும்.
   (4) வேறு சம்பள அளவுத்திட்டத்திற்குரிய உரித்துரிமையை பெற்றுக் கொள்ளல். (.........)

14. திருமதி அகிலா சிற்சபேசனின் வினைத்திறன்காண் தடை தாண்டலை குறித்த திறைவில் பூரணப்படுத்த முடியாது போனால் நியமன அதிகாரிக்கு அதனைப் பூரணப்படுத்துவதற்காக வருடாவருடம் நீடிப்பதற்கு உட்பட்டு உயர்பட்சமாக அவருக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய வருடங்கள் எண்ணிக்கை எவ்வளவு?
   (1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து (.........)

15. அந்த உச்ச கால நீட்சி எல்லையினுள்ளே வினைதிறன் காண் தடை தாண்டலை பூரணப்படுத்துவதற்கு திருமதி. அகிலா சிற்சபேசன் தவறினால் நியமன அதிகாரியினால் எடுக்கக்கூடிய படிமுறை யாது?
   (1) சம்பள ஏற்றத்தை பிற்போடல்
   (2) வினைதிறன் தடைதாண்டலை பூரணப்படுத்தும்வரை வேலையில் இருந்து இடைநிறுத்தி வைத்திருத்தல்.
   (3) காரியத்திறமின்மையால் நியமனத்தை முடிவுறுத்தல்.
   (4) காரியத்திறமின்மையால் கட்டாய விடுமுறையில் அனுப்புதல். (.........)

*( 01 × 5 = 05 புள்ளிகள்)*

- **16** தொடக்கம் **20** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் / சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை.

நகர திட்டமிடல் அமைச்சின் கீழேயுள்ள நகர வேலைத் திணைக்களத்தினது கணக்குப் பிரிவினது நடவடிக்கைகள் தொடர்பாக செய்யப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டமையானது கணக்குப் பிரிவின் பிரதான கடமைகள் பல நிதிப் பிரமாணத்தின் அடிப்படையில் நடைபெறவில்லை என்பதாகும். விசேடமாக உத்தியோகபூர்வ கணக்குகளைத் திறத்தல், வங்கிக்கூற்றுகளை தயாரித்தல், காசோலைகளைப் பெறுதல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றின்போது, நிதிப் பிரமாணங்கள் கவனத்திற் கொள்ளப்படாது நடைபெற்றிருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகள் / சம்பவங்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு** செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

16. நகர வேலைத் திணைக்களத்தினது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கினை ஆரம்பிக்கும்போது திணைக்களத் தலைவரினால் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது கீழேயுள்ள எந்த நிறுவனத்திடமிருந்தாகும்?
   (1) நகர திட்டமிடல் அமைச்சு (2) கணக்காய்வாளர் திணைக்களம்
   (3) திறைசேரி (4) இலங்கை மத்திய வங்கி (.........)

17. ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய நகர வேலைத்திணைக்களத்தினது வங்கி கணக்கிணக்கக்கூற்றை தயாரிக்க வேண்டியது நடைபெறும் மாதம் நிறைவடைந்து அடுத்துவரும் மாதத்தினது எந்த நாளிற்கு முன்னராகும்?
   (1) 10 ஆம் திகதிக்கு (2) 15 ஆம் திகதிக்கு (3) 20 ஆம் திகதிக்கு (4) 30 ஆம் திகதிக்கு (.........)

[பக் 5 ஐப் பார்க்க.

18. நகர அபிவிருத்தி திணைக்களத்திற்கு பதிவுத்தபாலில் காசோலையொன்று கிடைக்கப் பெற்றதன் பின்னர் அது தொடர்பான விபரம் முதலில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆவணம் இவற்றுள் எது?

(1) ஜீ.ஏ.எம் 80 (G.A.M. 80) (2) ஜீ.ஏ.எம் 81 (G.A.M. 81)
(3) ஜீ.ஏ.எம். 82 (G.A.M. 82) (4) ஜீ.ஏ.எம் . 83 (G.A.M. 83) (.........)

19. நகர வேலைத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட காசோலையொன்று செல்லுபடியாகும் கால எல்லையை நீடிக்கும்போது நிதிப்பிரமாணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க அந்த செல்லுபடியாகும் கால எல்லையை திருத்தப்படும் நாள் தொடக்கம் எவ்வளவு கால எல்லைக்கு நீடிக்க முடியும்.

(1) 30 நாட்களுக்கு அதிகமாகாத காலத்திற்காக
(2) 60 நாட்களுக்கு அதிகமாகாத காலத்திற்காக
(3) 90 நாட்களுக்கு அதிகமாகாத காலத்திற்காக
(4) 180 நாட்களுக்கு அதிகமாகாத காலத்திற்காக (.........)

20. நகர வேலைத்திணைக்களத்தின் மூலம் குறித்த ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த காசோலை யொன்று தொலைந்து போன சந்தர்ப்பத்திலே அந்த காசோலைக்காக புதிய காசோலை ஒன்றை விநியோகிப்பதற்காக கட்டாயமாக பெற்றுக் கொள்ள வேண்டிய ஆவணம் இவற்றுள் எது?

(1) காசோலை காப்புறுதி சான்றிதழ். (2) இழப்பு காப்புறுதி முறி
(3) வர்த்தக வங்கி காசோலை முறி (4) இழப்ப ஈடுசெய்யும் சான்றிதழ் (.........)

*( 01 × 5 = 05 புள்ளிகள்)*

- **21** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் / சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை.

அரச சேவையிலே 20 வருடங்கள் அளவிலே அனுபவத்தைக் கொண்டுள்ள திரு. தேவப் பிரகாஷ் சமரவீரன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையிலே சித்தியடைந்து இலங்கை நிர்வாக சேவையில் பிரவேசித்து 10 வருடங்கள் ஆவதுடன் தற்போது அவர் அடிப்படை வசதிகள் அமைச்சினது பிரதிப் பணிப்பாளராகக் கட்மையாற்றுகிறார்.

திரு. பிரசாத் ஆறுமுகம் அவர்கள் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அரச வேவையில் பிரவேசித்து 02 வருடங்கள் அவிதுடன் அவர் அடிப்படை வரு அதன் அபிவிருத்தி அமைச்சில் உதவி பணிப்பாளராக கடமையாற்றுவிறாக.

தேசிய வீதி கூட்டுத்தாபனமானது அடிப்படை வசதிகள் அமைச்சின் கீழேயுள்ள அரச நிறுவனமொன்றாகும். பல வருடங்களாக நட்டமடைந்துவரும் நிறுவனமொன்றாக காணப்படும் அக்கூட்டுகாவனத்திள் நிர்வாக கட்டமைப்பிலே முழுமையான மீள் கட்டமைப்பை மேற்கொள்வதற்கு அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் எதிர்பார்க்கின்றார். அதற்காக தேசிய வீதி கூட்டத்தாபனத்தின் நிர்வாகப் பணிப்பாளராக இலங்கை நிர்வாக சேவையிலே அனுபவம் வாய்ந்த அலுவலர் ஒருவரைத் தற்காலிகமாக நியமிக்கும்படி அமைச்சரினால் அடிப்படை வசதிகள் அமைச்சினது செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரது ஆலோசனைக்கேற்ப அமைச்சின் செயலாளரினால் தேசிய வீதிக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக பணிப்பாளராக திரு. தேவபிரகாஷ் சமரவீரனை நியமிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டது. விசேடமாக திரு. தேவபிரகாஷ் சமரவீரன் அவர்கள் இதற்கு முன்னரும் அரச சேவையிலே தற்காலிமாக விடுவிக்கப்பட்ட அலுவலராக இரு வருடங்களும் எட்டு மாதங்களுமாக அரசிற்குரிய கூட்டுத்தாபனத்திலே கடமையாற்றிய அனுபவம் இங்கு செயலாளரினால் அவதானிக்கப்பட்டிருந்தது.

அதற்கேற்ப தனது அமைச்சினது செயலாளரின் வேண்டுகோள் மற்றும் தேவைப்பாடுகளை கருதி தற்காலிகமாக தேசிய வீதிக் கூட்டுத்தாபனத்தினது நிர்வாகப் பணிப்பாளர் பதவியை பொறுப்பேற்பதற்கு திரு.தேவப்பிரகாஷ் சமரவீரன் உடன்பட்டார்.

இதற்கிடையே திரு.பிரசாத் ஆறுமுகம் அவர்களினை அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழேயுள்ள அரச கூட்டுத்தாபனமொன்றான நீர்வள அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கு இணைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகள் / சம்பவங்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

21. அரச சேவைகள் ஆணைக்குழுவினது நிர்வாக ஒழுங்குவிதிகளுக்கேற்ப திரு.தேவபிரகாஷ் சமரவீரன் அவர்களை, தேசிய வீதி கூட்டுத்தாபனத்திற்கு தற்காலிகமாக விடுவிப்பதற்கான வேண்டுகோளை முன்வைக்க வேண்டியது எந்த அலுவலரினாலாகும்?

.............................................................................................................

[பக் 6 ஐப் பார்க்க.

22. அந்த வேண்டுகோளை செய்ய வேண்டியது தாபன விதிக்கோவையின் எந்த பின்இணைப்பின் படியாகும்?

.......................................................................................................................

23. திரு.தேவபிரகாஷ் சமரவீரன் அவர்கள் தேசிய வீதி கூட்டுத்தாபனத்திற்கு தடவையொன்றிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்படக்கூடிய உச்ச கால எல்லை எவ்வளவு?

